# ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

## *20 வது பொது குழுக்கூட்டம் (10.07.2022)*

நமது இயக்கத்தின் 20-வது பொதுகுழுக் கூட்டம் 10.07.1922 கடவுள் வாழ்த்துடன் தொடங்கியது பொதுகுழு கூட்டத்திற்கு 26 உறுப்பினர்களும் 4 பார்வையாளர்களும் கலந்துக் கொண்டனர். பொது செயலர் வரவேற்புரை வழங்கினார். அடுத்து தலைவர் உரை ஆரம்பமானது. தலைவர் ,தமது உரை துவங்கும் முன்பே, இப்பொதுக்குழுவுக்கு உரிய கோரம், அதாவது 50 உறுப்பினர்கள் வராததால், தேர்தல் முடிவுகள் தவிர வேறு எந்த முடிவும் எடுக்க இயலாது. பொதுவாக விவாதிக்கலாம் என்று தெரிவித்து அடுத்த பொதுகுழு தேதி பின்னர் நேர்மைநெறியில் அறிவிக்கப்படும் என்று தெரிவித்து, தமது உரையில் தெரிவித்தார். தலைவர் உரையில் ஆ.என்.ஐ.ன் (RNI) ஒப்புதல் பற்றி உரையாற்றினார். அமைச்சர் செந்தில் பாலாஜி மீது ஊழல் வழக்கு பற்றி உரையாற்றினார். நமது நாட்டின் ஊழல்கள் அதிகமாவதால் தற்போது இலங்கையில் உள்ள பொருளாதார நெருக்கடி நமது நாட்டுக்கும் ஏற்படும் என்று கூறினார். வாழ்க்கை மேம்பாடுகளை (WELFARE) பற்றி எதுவும் செய்ய வேண்டியதில்லை. நமது குறிக்கோள் ஊழலை ஒழிப்பது மட்டுமே என்று வேண்டுக்கோள் விடுத்தார்.

பொது செயலர் திரு.வே. கார்த்திகைராஜன் 2021-2022 க்கான ஆண்டறிக்கையை அறிவித்தார் .இரண்டு ஆண்டுகளாகக் கொரனாவால் பொதுகுழுகூட்டம் நடைபெறாததற்கு வருத்தம் தெரிவித்தார். நிதி செயலர் திரு.தனசேகரன் அவர்கள் 2021-2022 ம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஆண்டறிக்கையை விவரித்து பேசினார். பின்பு, தற்போது பொதுகுழு முழு கோரம் (CORAM) இல்லாததால் , கோரிக்கைகள்/ தீர்மானங்கள் அடுத்த தள்ளி வைக்கப்பட்ட பொதுகுழுவில் மீண்டும் வைக்கப்படும் என்று தலைவர் தெரிவித்தார்.

2022-2025க் கான செயற்குழு உறுப்பினர்கள் தேர்தலில் கீழ்கண்ட ஏழு பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தேர்தல் குழு அதிகாரி திரு.ப.முத்துசாமி அறிவித்தார்.

1. **தலைவர் : ந. சுப்ரமணியன்**
2. **உ.தலைவர்: :. அய்யப்பன்,**
3. **பொதுசெயலர் : வே. கார்த்திகைராஜன்**
4. **நிதிசெயலர் : அ. தனசேகரன்,**
5. **வெளியீடு : கோவிந்தசாமி,**
6. **தலைமையகம் ,: ஜெ.மனோகர்,**
7. **கலைதொடர்ப்பு : சாந்தகுமார்**

மீதம் உள்ள நான்கு பதவிககளுக்கு விண்னப்பம் ஏதும் வராததால் அவை காலியாக உள்ளன.

அடுத்துப் பேசிய திருச்சி மாவட்டத் தலைவர் திரு.எம்.சுதாகர் ஏசுவடியான் அவர்கள் சொந்த வாழ்க்கையில் அவர் அரசு பணியாற்றியபோது நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு சாதனைகள் மற்றும் அனுபவங்களைக் கூறினார். நமது இயக்கத்தின் வலைதளத்தில் உள்ள குறைகளை சரிசெய்யுமாறு வேண்டிக்கொண்டார் .நேர்மை மன்றம் என்று ஒன்றை ஏற்படுத்தி அதில் இளைஞர்களையும், மாணவர்களையும் இணைத்து நீதி, நேர்மையைக் காப்பபாற்றுவதற்குப் பயிற்சி அளிக்குமாறு யோசனை கூறினார்.

அடுத்துப் பேசிய திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.எம்.வி. சீனிவாசன் அவர்கள் தமிழ் நாட்டில் இருக்கும் ஊழலை பற்றி பேசினார். அரசுத் துறை வேலைகளில் 40/- விழுக்காடு இலஞ்சமாகத் தர வேண்டி இருப்பதற்கு வருத்தம் தெரிவித்தார் மேல்மட்டத்தில் இருந்து கீழ்மட்டம் வரை இலஞ்சம் கொடுத்தால் தான் காரியம் சாதிக்க முடிகிறது என்று வேதனைப்படார். நமது இயக்கத்திலுள்ள அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சரை நேரடியாக சந்தித்து இலஞ்சத்தை பற்றிக் கூறி அதனைத் தடுக்க வழிவகை செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்ததாகப் பேசிய தஞ்சை மாவட்ட திரு.குணசேகரன் அவர்கள், அரசு பள்ளி கல்வித்துறை தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து ஒய்வு பெற்றவர். அவர் உரையாற்றும் போது தன்னுடைய பணிகாலத்தில் நேர்மையாக இருந்ததால் ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி விவரித்தார். பள்ளி கல்வி துறைகளில், அவர் பணிபுரிந்த இடங்களிலும் நடந்த ஊழலை எதிர்த்து துணிவாக எதிர்த்து புகார் கொடுத்தும் எஃப்.ஐ.ஆர். பதிவுகளுக்கு பதில் வேண்டும் என்று போராடினார். இடைமறித்த தலைவர், அந்த தகவல்களைத் அளிக்குமாரும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்தார். அவரும் அனுப்புவதாக தெரிவித்தார். ஊழலைக் குறைக்க. சில தகவல்களின் படி பொது நல வழக்கு தொடங்க வேண்டும் என்று உரைத்தார். நமது இயக்கத் தலைவர் பொதுநல வழக்கு தொடர அவரிடம் ஆவணங்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். நமது இயக்கம் மூலம் பொதுநல வழக்கு தொடங்கலாம் என்று அறிவித்தார்.

அடுத்துப் பேசிய மாவட்ட செயலர் திரு.எம்.கலியபெருமாள் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் வண்டல் மண் திருடு போவது பற்றி உரையாற்றினார். இந்த நாட்டில் ஊழல் இல்லாமல் எதுவும் நடக்காது என்று கூறினார்.

அடுத்ததாக திருச்சி மாவட்ட செயலர் திரு.எ.பன்னீர்செல்வம் அவர்கள் உரையாற்றினார். அவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள வருவாய் துறை அலுவலகங்களில் நடைபெறும் ஊழலை பற்றி அலசி ஆராய்ந்து விவரித்தார்.

அடுத்தபடியாக, நம் இயக்க உறுப்பினர்கள் அனைவரும், தலைவர் தலைமையில் ஊழல் எதிர்ப்பு உறுதிமொழியை வாசித்து உறுதி ஏற்று கொண்டனர். நமது இயக்க நிதிசெயலர் திரு.எ.தனசேகரன் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். முடிவில், நாட்டுபண்ணுடன் இந்த வருட பொதுகுழுக்கூட்டம் இனிதே முடிவுற்றது.

ந. சுப்ரமணியன்<br>
தலைவர்

வே. கார்த்திகை ராஜன்<br>
பொதுச்செயலாளர்